[திரு. சு. ரவி] [2021 பிப்ரவரி 26

தமிழகத்தை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்தான் 100 ஆண்டுகளானாலும் மக்கள் பணி ஆற்றும் என்று இந்தச் சட்டமன்றத்தில் சூளுரைத்து, வங்கக் கடலோரம் உறங்கிக் கொண்டிருக்கின்ற இதய தெய்வம், புரட்சித் தலைவி அம்மா அவர்களையும் வணங்கி, தமிழ்நாட்டு மக்களின் All pass முதலமைச்சராக, ஏழையெளிய மக்களுக்கு நித்தம் நித்தம் திட்டங்களை வழங்கிக் கொண்டிருக்கின்ற குடிமராமத்து நாயகன், ஒரு சாமானிய முதலமைச்சர் என்று தமிழகத்தில் நிரூபித்துக் கொண்டிருக்கின்ற தமிழகத்தினுடைய மாண்புமிகு முதலமைச்சர் ஐயா எடப்பாடியார் அவர்களை வணங்கி, தென்பாண்டி சிங்கம், ஜல்லிக்கட்டு நாயகன் மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் அவர்களையும் வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2018–2021 ஆம் ஆண்டுகளுக்கான சட்டவிதிகள் ஆய்வுக் குழுவின் 10–வது அறிக்கையை குழுவின் சார்பாக பேரவைக்கு அளிக்கிறேன்.

(உ) அரசு உறுதிமொழிக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசு உறுதிமொழிக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.எஸ். இன்பதுரை அவர்கள்.

திரு. ஐ.எஸ். இன்பதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒர் அரசினுடைய திட்டம் சிறப்பான திட்டமா என்பதை எவ்வாறு கணக்கிட வேண்டுமென்று ஒருமுறை காந்தியடிகளிடம் கேட்டார்கள். நாட்டினுடைய “ஒரு திட்டம் கடைக்கோடி குடிமகனின் விழிநீரைத் துடைக்கிறதா, நொறுங்கிக் கிடக்கிற அவனுடைய இடுப்பு எலும்பைத் தொட்டு அவனைத் தூக்குகிறதா என்று பார்த்தால், அவ்வாறு செய்தால் அதுதான் சிறந்த திட்டம்” என்று சொன்னார் மகாத்மா காந்தியடிகள்.

ஏழையெளியவர்களின், விவசாயிகளின் கண்ணீரைத் துடைக்கின்ற திட்டங்களை நாள்தோறும் தந்து கொண்டிருக்கிற அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசின், ஆட்சித் தேரின் இரு சக்கரங்களாகச் செயல்பட்டு, அரசை முன்னேற்றப் பாதையில், விரைவாக நடைபோட்டு, செயல்படுத்திக் கொண்டிருக்கிற நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் எடப்பாடியார் அவர்களையும், அவருக்குத்

2021 பிப்ரவரி 26] [திரு. ஐ.எஸ். இன்பதுரை]

துணையாக, பக்கபலமாக, பாதுகாப்பாக இருக்கிற மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் ஓ.பி.எஸ். அவர்களையும் வணங்குகிறேன்.

இந்தப் பேரவையில் கொடுக்கப்படுகிற உறுதிமொழிகள் செயல்படுத்தப்படுகின்றனவா என்று, இந்த ஆட்சி செங்கோலை ஒவ்வொரு பகுதிக்கும் தூக்கிச் சென்று, அங்கிருக்கிற அதிகாரிகளை ஆய்வு செய்து, அந்தத் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றனவா, உறுதிமொழிகள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றனவா என்று ஆய்வு செய்கிற ஒரு பெரும் பணியை எனக்குத் தந்து, அந்தப் பெரும் பணியை 3 ஆண்டுகளில் சிறப்பாக நிறைவேற்றுகிற வேலையில் எனக்கு ஒத்துழைப்பு தந்து, என்னை நியமித்த பேரவைத் தலைவராகவும், இந்த ஆட்சி மண்டபத்தின் சாரதியாகவும் இருக்கிற பேரவைத் தலைவரே, உங்களை வணங்குகிறேன்.

இந்த நல்ல வாய்ப்பை எனக்கு வழங்கிட பரிந்துரை செய்த மாண்புமிகு முதல்வர் அவர்களையும், மாண்புமிகு துணை முதல்வர் அவர்களையும் மீண்டும் வணங்கி, பேரவைச் செயலாளர் அவர்களையும், நான் செல்கின்ற இடமெல்லாம் எனக்கு அறிவுரைகளைத் தந்து, பாதுகாப்பாக இருந்து என்னை வழிநடத்திய உறுதிமொழிக் குழுவின் அங்கத்தினர்கள், அலுவலர்கள் அனைவரையும் வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2018 முதல் 2021 ஆம் ஆண்டுகளுக்கான அரசு உறுதிமொழிக் குழுவின் 79–வது முதல் 85–வது வரையிலான 7 அறிக்கைகளை குழுவின் சார்பாக உவகையோடு இந்தப் பேரவைக்கு அளிக்கிறேன்.

பிற்பகல் 12–05

6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

(அ) தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2021

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.